ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 1.2 – வண்ணமாடங்கள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.2 – வண்ணமாடங்கள்

‡ வண்ண மாடங்கள் சூழ் ⋆ திருக்கோட்டியூர் ⋆
கண்ணன் கேசவன் ⋆ நம்பி பிறந்தினில் ⋆
எண்ணெய் சுண்ணம் ⋆ எதிர் எதிர் தூவிடக் ⋆
கண்ணன் முற்றம் ⋆ கலந்தளறாயிற்றே ‖ **1.2.1** ‖

ஓடுவார் விழுவார் ⋆ உகந்தாலிப்பார் ⋆
நாடுவார் நம்பிரான் ⋆ எங்குற்றான் என்பார் ⋆
பாடுவார்களும் ⋆ பல் பறை கொட்டநின்று ⋆
ஆடுவார்களும் ⋆ ஆயிற்றாய்ப் பாடியே ‖ **1.2.2** ‖

பேணிச் சீருடைப் ⋆ பிள்ளை பிறந்தினில் ⋆
காணத் தாம் புகுவார் ⋆ புக்குப் போதுவார் ⋆
ஆணொப்பார் ⋆ இவன் நேரில்லை காண் ⋆ திரு -
வோணத் தான் ⋆ உலகாளும் என்பார்களே ‖ **1.2.3** ‖

உறியை முற்றத்து ⋆ உருட்டி நின்றாடுவார் ⋆
நறு நெய் பால் தயிர் ⋆ நன்றாகத் தூவுவார் ⋆
செறிமென் கூந்தல் ⋆ அவிழத் திளைத்து ⋆ எங்கும்
அறிவழிந்தனர் ⋆ ஆய்ப்பாடி ஆயரே ‖ **1.2.4** ‖

கொண்ட தாளுறி ⋆ கோலக் கொடுமழு ⋆
தண்டினர் ⋆ பறியோலைச் சயனத்தர் ⋆
விண்டமுல்லை ⋆ அரும்பன்ன பல்லினர் ⋆
அண்டர் மிண்டிப் ⋆ புகுந்து நெய் ஆடினார் ‖ **1.2.5** ‖

கையும் காலும் நிமிர்த்துக்⋆ கடார நீர்⋆
    பைய ஆட்டிப்⋆ பசுஞ்சிறு மஞ்சளால்⋆
ஐயநாவழித் தாளுக்கு⋆ அங்காந்திட⋆
    வையம் ஏழும் கண்டாள்⋆ பிள்ளை வாயுளே ॥ **1.2.6** ॥

வாயுள் வையகம் கண்ட⋆ மட நல்லார்⋆
    ஆயர் புத்திரன் அல்லன்⋆ அருந்தெய்வம்⋆
பாய சீருடைப்⋆ பண்புடைப் பாலகன்⋆
    மாயன் என்று⋆ மகிழ்ந்தனர் மாதரே ॥ **1.2.7** ॥

பத்து நாளும் கடந்த⋆ இரண்டாநாள்⋆
    எத்திசையும்⋆ சயமரம் கோடித்து⋆
மத்த மாமலை⋆ தாங்கிய மைந்தனை⋆
    உத்தானம் செய்து⋆ உகந்தனர் ஆயரே ॥ **1.2.8** ॥

கிடக்கில் தொட்டில்⋆ கிழிய உதைத்திடும்⋆
    எடுத்துக் கொள்ளில்⋆ மருங்கை இறுத்திடும்⋆
ஒடுக்கிப் புல்கில்⋆ உதரத்தே பாய்ந்திடும்⋆
    மிடுக்கிலாமையால்⋆ நான் மெலிந்தேன் நங்காய் ॥ **1.2.9** ॥

‡ செந்நெலார் வயல் சூழ்⋆ திருக்கோட்டியூர்⋆
    மன்னு நாரணன்⋆ நம்பி பிறந்தமை⋆
மின்னு நூல்⋆ விட்டுசித்தன் விரித்த⋆ இப்
    பன்னு பாடல் வல்லார்க்கு⋆ இல்லை பாவமே ॥ **1.2.10** ॥

அடிவரவு — வண்ணம் ஓடுவார் பேணி உறியை கொண்ட கை வாயுள் பத்து கிடக்கில் செந்நெல் சீதக்கடல்

வண்ணமாடங்கள் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்